# இலங்கை வெளிவிவகார அமைச்சின் நடமாடும் சேவை 28.08.2016 தொடக்கம் 31.08.2016 வரை – நல்லூர்

இலங்கை வெளிவிவகார அமைச்சின் கொன்சியுலர் பிரிவானது 28.08.2016 தொடக்கம் 31.08.2016 வரையான காலப்பகுதியில் நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் ஆலயத்தை அண்மித்த பகுதியல் நடமாடும் சேவையொன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் நோக்கம் வடபகுதி மக்களுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் கொன்சியுலர் அலுவல்கள் தொடர்பான சேவைகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதாகும்.

இந்த நடமாடும் சேவையின் ஊடாக வடபகுதி மக்கள் சர்வதேச தேவைகளுக்காக ஆவணங்களை சான்றுறுதிப்படுத்துதல், வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் பிறப்பு, விவாகம், இறப்புக்களை பதிவு செய்தல் , இலங்கை கடவுச்சீட்டு விண்ணப்பம் மற்றும் பல்வேறு கொன்சியுலர் அலுவல்கள் சம்பந்தமான ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அலுவலர்களும் இந்த நடமாடும் சேவையில் இணைந்து கொண்டு இரட்டை பிரஜாவுரிமை, குடியுரிமை பெறுதல் தொடர்பான தகவல்களை வழங்கவுள்ளார்கள்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர அவர்கள் இந்த நடமாடும் சேவையினை 28.08.2016 மு.ப. 10.00 மணியளவில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.